வாழ்வோடு விபரீத விளையாட்டைத் தொடங்கியிருக்கிறது. அதற்கான முதல் எதிர்ப்புக் குரல் ஆணித்தரமாக ஒலிக்கப்பட வேண்டும். 69 சதவிகித இட ஒதுக்கீட்டை வெற்றிகரமாக அமல்படுத்திய மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, கர்ம வீரர் காமராஜர் ஆகியோர் பண்படுத்தித் தந்த வழியிலே சமூக நீதியின் நாற்றங்காலாகத் தொடர்ந்து இருந்து வரக்கூடிய இந்தச் சட்டமன்றத்தில் சமூக நீதியினுடைய கட்டமைப்பை அசைத்துப் பார்க்க எண்ணிக் கொண்டிருக்கக்கூடிய மத்திய அரசுக்கு எதிராக ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வந்து நிறைவேற்றிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இதே அவையிலே நான் பேசுகிறபோது ஸ்டெர்லைட் ஆலை பிரச்சினையைக் குறிப்பிட்டுச் சொன்னேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். இன்று வந்திருக்கக்கூடிய செய்தி, ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு செல்லும் என்று உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் செய்தி வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி வந்திருந்தால் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.*

(அ) பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு பத்து சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசு கேபினட்டில்*

[திரு. டி. ஜெயக்குமார்] [2019 ஜனவரி 8

வைத்தது பற்றி வந்திருக்கிற செய்தியைக் குறித்து சட்டமன்றத்திலே எழுப்பினார்கள். உங்களைப் போன்று அந்தச் செய்தியை நாங்களும் படித்தோம். ஆனால் ஒன்று, ஆண்டாண்டுக் காலமாக இட ஒதுக்கீட்டில் இந்தியாவிலேயே ஒரு முன்னோடி மாநிலம் என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாடு என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

1921–லிருந்து communal G.O. போட்ட முதல் மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. அப்படி அந்த இட ஒதுக்கீட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற முனைப்போடுதான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இட ஒதுக்கீட்டிற்கு எந்தவித பாதிப்பும் வரக் கூடாது என்ற அடிப்படையிலே, மண்டல் கமிஷன் குறித்த விஷயம் ஒரு தீர்ப்பின் அடிப்படையிலே உச்ச நீதிமன்றம் சென்றபோது, 50 சதவிகிதத்திற்கு மிகைப்படக் கூடாது என்கின்ற அந்தக் கருத்து வந்தபோது முதன்முதலாகக் குரல் கொடுத்தது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அப்போது 1991–1996–ல் Backward Classes Minister ஆக இருந்தேன். குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அன்றைக்கே அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் கூட்டி, டெல்லிக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று, அன்றைக்கு பாரதப் பிரதமராக இருந்த திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்களைச் சந்தித்து, 1921–லிருந்து நாம் இட ஒதுக்கீட்டில் முன்னோடியாக இருந்ததையெல்லாம் எடுத்துச் சொல்லி, அதன் அடிப்படையிலே 69 சதவிகித இட ஒதுக்கீடு எங்களுடைய உரிமை என்பதை உறுதிப்படுத்திய ஒரே தலைவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் அரசமைப்புச் சட்டமும் திருத்தப்பட்டு, திருத்தப்பட்டதோடு மட்டுமல்லாமல், மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடிதம் எழுதி, அதையெல்லாம் நீங்கள் ஆதரிக்க வேண்டுமென்று பாராளுமன்றத்திலே குரல் கொடுத்து, இன்றைக்கும் தமிழ்நாட்டிலே 69 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் யாரென்று தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள் அத்தனை பேரும் நினைத்துப் பார்க்கக்கூடிய ஒரே தலைவர், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் சமூக நீதி காத்த

2019 ஜனவரி 8] [திரு. டி. ஜெயக்குமார்]

வீராங்கனை என்றுகூட நம்முடைய திராவிட கழகத் தலைவர் ஐயா வீரமணி அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டினார்கள். எனவே, அந்த வகையிலே 69 சதவிகித இட ஒதுக்கீடு என்பது நம்முடைய உரிமை. பிற்படுத்தப்பட்டோருக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு, சீர்மரபினர்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு, பழங்குடியினருக்கு என்று இட ஒதுக்கீடு செய்கிறோம். ஆனால், இப்போது மத்திய அரசு ஒரு கொள்கை முடிவுதான் எடுத்திருக்கின்றார்கள். அது சம்பந்தமான எந்தவோர் அறிவிப்பும் அரசுக்கு வரவில்லை. எனவே, அப்படி வரும்போது எங்களுடைய கருத்தை நிச்சயமாக நாங்கள் தெரியப்படுத்துவோம்.

முற்பகல் 11–20

(இ) எழும்பூர் தொகுதி, திடீர் நகர் மற்றும் பி.கே. காலனி பகுதிகளில் குடிசைகளுக்கு மாற்றாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) அரசுக்குத் தகவல் வரவில்லை. (குறுக்கீடு) இருங்கள். இருங்கள். திரு. உ. தனியரசு, உட்காருங்கள். இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். இதையெல்லாம் முன்பே என்னிடம் கேட்க வேண்டும். இப்படி எல்லாம் வந்து திடீரென்று* raise *செய்தால் உங்களை* allow *செய்வதற்கு எனக்கு நேரமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, வட்டம் 104–ல், 800 குடிசை வீடுகளில் ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் வசித்து வருகிறார்கள். கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு அந்த இடத்தில் தீ விபத்து ஏற்பட்டபோது, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் மேயராக இருந்தபோதுதான் அவர்களுக்கு கல் நாரினால் வேய்ந்த வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்கள். இயற்கைப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட அந்த வீடுகள் தற்போது குடிசை வீடுகளாக இருக்கின்றன. அந்த இடத்திற்குப் பின்னால் மாநகராட்சிக்குச் சொந்தமான சுமார் 90 கிரவுண்ட் இடம் காலியாக உள்ளது. அந்த இடத்தை மாநகராட்சியிடமிருந்து வகைமாற்றம் செய்து, திடீர் நகரில் வசிக்கக்கூடிய அந்த மக்களுக்கு அந்த இடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.*